அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 118/2017 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 06.01.2025 |
| பெயர் விஜயன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

10. கிரையபத்திரத்தில் 11 ம் பக்கத்தில் 10 நாட்களுக்குள் தாவா சொத்திடின் சுவாதினத்தை பிரதிவாதியின் வசம் ஒப்படைப்பதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னல் சரிதான் ஆனால் பணம் கட்டவில்லை. பணம் கட்டவில்லை என்று பிரதிவாதியின் மீது நான் ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் பத்திரம் வங்கியில் இருப்பதால் எடுக்கவில்லை. தற்போது வரை வங்கியல் கடன் தொகை கட்டிமுடித்து பத்திரத்தை மீட்கவில்லை. வங்கியில் இருந்து தாவா சொத்தை ஜப்தி செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

11. தாவா சொத்திற்கான கிரையதொகையை பிரதிவாதி ஏற்கனவே

என்னிடம கொடுத்துவிட்டார் நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல, வங்கியில் இருந்து நோட்டீஸ் அனுப்பி பணம் பற்றி என்னிடம் வந்து தொடர்நது கேட்டு செல்கிறார்கள். மேற்சொன்ன அறிவிப்பு இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவாவில் மேற்சொன்ன சங்கதி பற்றி குறிப்பிடிடு சொல்லவில்லை என்றால எனக்கு தெரியாது.

12. பிரதிவாதி கிரையதொகை முழுவதும கொடுத்துவிட்டார் உண்மையை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இத்தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும என்று சொன்னால் சரியல்ல. கிரையபணம் கொடுத்ததால் பிரதிவாதி என்மீது சுவாதினமீட்பிற்கான பரிகாரம் கோர தகுதி உடையவர் உரிய வழக்கு தாக்கல் செய்வார் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.